சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி.156/2016

**PW 2 வெள்ளிங்கிரி** **02.06.2023**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பாலக்காடு ரோட்டில் ஐயம்பாளையத்திற்கு எதிரே சர்ச்சுக்கு அருகே விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். விபத்தில் காயம் ஏற்பட்டு இறந்தவர் என் மகன் கருப்புசாமி என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரிதான். விபத்து காலை 08.10 மணிக்கு நடைபெற்றது. நான் மற்றொரு இரு சக்கரவாகனத்தில் சென்றுகொண்டிருந்தேன். வண்டியின் பதிவு எண். 3182 ஆகும். அந்த வாகனத்தை நான்தான் ஓட்டினேன். எனக்கு இரு சக்கர வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் இல்லை. என் பின்னால் குமாரசாமி மகன் சுப்பிரமணியம் அமர்ந்து வந்தார். எனக்கு முன்புறமாக 20 அடி தூரத்தில் விபத்து நடைபெற்றது. நான் விபத்து குறித்து புகார் அளித்தேன் என்றால் சரிதான். நானே சொல்லி புகார் எழுதி காவல்நிலையத்தில் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரில் 200 அடி தூரம் வித்தியாசத்தில் ஒன்றன் பின் ஒன்றாக சம்பவ சமயம் சென்றுள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ ரோடு அகலமான ரோடு என்றால் சரிதான். என் மகன் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியும், 1ம் எதிர்மனுதாரர் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கியும் வந்தார் என்றால் சரிதான். விபத்து இரண்டு இரு சக்கர வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, எதிரே வந்த இரு சக்கர வாகன ஓட்டுநர் வலது புறம் ஏறி வந்து சைடில் வந்து அடித்துவிட்டார். எதிரே வந்த 1ம் எதிர்மனுதாரர் சரியாக வாகனத்தை ஓட்டிவந்தார் என்றாலும்

முன்னால் சென்ற லாரியை முந்தி ஓட்டிச்செல்லும்போது, என் மகன் பேருந்தை முந்தி வருவதற்காக ராங் சைடில் வாகனத்தை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. இரண்டு இரு சக்கர வாகனங்களுக்கும் இடதுபுறம்தான் சேதம் ஏற்பட்டிருந்தது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலும் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் மகன் ராங் சைடில் வந்து 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிவந்த இரு சக்கர வாகனத்தின் மீது மோதி என் மகனும் முரளியும் ரோட்டின் தென்புறம் விழுந்துவிட்டார்கள் என்றாலும் 1ம் எதிர்மனுதாரர் ரோட்டின் வடபுறமாக விழுந்துவிட்டார் என்றால் சரிதான். சரியான திசையில் சென்றுகொண்டிருந்த லாரி இருவர் மீதும் ஏறி இறப்பை ஏற்படுத்திவிட்டது என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனங்கள் இரண்டும் மோதியதால் என் மகனுக்கும் முரளிக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் சிறு காயம்தான் ஏற்பட்டது என்றாலும் லாரி ஏறிதான் இறப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் அளித்த புகாரில் லாரி ஏறியதாகவும், நிற்காமல் சென்றுவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அளித்த புகாரிலும் அவ்வாறுதான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சர்ச்சுக்கு முன்பாக விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் போலிசார் தாக்கல் செய்தள்ள வரைபடத்தில் சர்ச்சு குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் எனது புகாரில் விபத்தை லாரி ஏற்படுத்தியதாக சொல்லியுள்ள நிலையில் லாரி கண்டுபிடிக்கப்படவில்லை என்றால் சரிதான். 2 இறப்பை ஏற்படுத்திய லாரியை கண்டுபிடிக்க முடியாத நிலையில் வழக்கை முடிக்கவேண்டும் என்பதற்காக சரியாக புலன்விசாரணை செய்யாமல் விபத்து நடக்காத இடத்தை சம்பவ இடமாக காட்டி வழக்கை முடித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என் மகன் கருப்புசாமிக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. என்னிடம் நகல் இல்லை. அவன்

எப்போதும் அசலை பாக்கெட்டில் வைத்திருப்பான். விபத்து சமயம் என் மகனுக்கு 22 வயது. விபத்திற்கு முன்பாக 3 வருடத்திற்கு முன்பாக என் மகன் ஓட்டுநர் உரிமம் பொள்ளாச்சி ஆர்டிஓ அலுவலகத்தில் எடுத்தான். பொள்ளாச்சி வட்டார போக்குவரத்து அலுவலகம் மூலமாக ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்ய நான் நடவடிக்கை எடுக்கப்போவதில்லை. என் மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் அதனால்தான் மோட்டார் வாகன ஆய்வாளர் சிஆர் வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. மசாஆ.5 ல் என் மகனிற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கும் ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றாலும் அது குறித்து மசாஆ.5 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மகனுக்கு இரு சக்கர வாகனத்தை ஓட்டத் தெரியாமல் ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்பதால் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல விபத்தில் என் மகன் கீழே விழுந்தபிறகு லாரி ஏறி விபத்து ஏற்பட்டுள்ளதால் லாரியின் ஓட்டுநர், உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளர் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றாலும் அவர்கள்தான் எனக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. என் மகன் பூர்வீகா மொபைல்ஸ்ல் வேலை பார்த்ததாக சொல்வதற்கு ஆதரவு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாதம் ரூ.10000/- சம்பாதித்து வந்ததற்கு ஆதரவு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகனின் கவனக்குறைவால் விபத்து நடைபெற்றுள்ளதால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள நஷ்டஈடு அதிகம் என்றால் சரியல்ல.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வாய்ப்பளித்தும் இல்லை.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி